கொடுக்கலாம் என்று டெண்டரில் கோரப்படுகிறது. அப்படி அவர்கள் மாற்று டிசைன் கொடுத்தால், அதையும் நம் அதிகாரிகள் பரிசீலிக்கிறார்கள். அவர்கள் தான் அதையும் பரிசீலித்து முடிவு செய்கிறார்கள். இங்கே என்னிடம் சரியான குறிப்பு இல்லை. எனக்குச் சரியாக நினைவிருந்தால், 25 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட டெண்டர்களுக்கு அப்படிப்பட்ட மாற்று 'டிசைன்' கொடுக்கலாம் என்றிருப்பதாக நினைக்கிறேன். சில நேரங்களில் அவர்கள் கொடுக்கிற மாற்றுத் திட்டங்கள் நன்மை பயக்கக்கூடியதாகவும், டெண்டர் தொகை குறைவாகவும் இருக்கும்போது அரசு அதை ஒப்புக்கொள்கிறது.

திரு. டி. கே. சுப்பையா : இப்போது ஒப்பந்தக்காரர் கொடுத்த 'டிசைன்' ஹை லெவல் பிரிட்ஜுக்குத்தானா அல்லது ஏற்கெனவே நமது மராமத்து இலாக்கா பொறியாளர்கள் கொடுத்த பெட் லெவல் அமைப்புக்குத்தானா ? இப்போது எந்த அமைப்புப்படி பாலம் அமைகிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நம்முடைய பொதுப் பணித் துறையினர் பெட் லெவல் காஸ்வேயிக்கும், ஹை லெவல் காஸ்வேயிக்கும் 'டிசைன்' கொடுத்தார்கள். The alternative design submitted by Messrs. Neelakantan Brothers for high level bridge at a cost of Rs. 50.82 lakhs was accepted. ஆக இப்போது 50.82 லட்சம் ரூபாய்க்கான மாற்று டிசைனை ஒப்புக் கொண்டிருக்கிறோம். வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் பலன் அடைவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மாற்று டிசைன் கொடுக்கிற தயாரிப்பாளர்களும், கண்ட்ராக்டர்களும் ஏதாவது அரசாங்கத்திலிருந்து ஊதியம் பெறுகிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதற்காகத் தனி ஊதியம் எதுவும் தரப்படுவதில்லை. ஆனாலும் இதன்மூலம் என்ஜினீயர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. காண்ட்ராக்டர்கள் மாற்று 'டிசைன்' தயாரிப்பதற்காக என்ஜினீயர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

Desilting unit

*99. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any separate desilting unit for repairing the silted tanks and ponds ;

(*b*) if so, the persons in charge of its administration ;

(*c*) the number of dredgers available for this purpose ; and

(*d*) the places where this work has been completed from 1-4-1968 to 31-3-1970 ?

[9th September 1970

வண்டல் நீக்கும் பிரிவு

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மேடிட்ட ஏரி, குளங்களை மராமத்து செய்யத் தனியாக வண்டல் நீக்கும் பிரிவு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் நிர்வாகப் பொறுப்பாளர்கள் யார் ?

(உ) இதற்கென மண் வாரும் இயந்திரங்கள் எத்தனை உள்ளன ?

(எ) 1-4-1968 முதல் 31-3-1970 வரை எங்கெங்கு இப் பணியை நிறைவேற்றியுள்ளனர் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) இல்லை.

(இ) இடமில்லை.

(உ) தற்போது 23 ஸ்க்ராப்பர்களும், 15 டோசர்களும், 12 டம்பர்களும், நான்கு டிப்பர்களும் தூர்வாரி பயன்படுத்தும் வேலை களுக்காகப் பயன்படுகிறது.

(எ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய தூர்வாரிப் பண்படுத்தும் திட்டங்கள் செங்கல் பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு, திருச்சி, மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படு கின்றன.

திரு. டி. கே. சுப்பையா : இந்தத் திட்டமானது இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டதா அல்லது ஏற்கெனவே இருந்தது இப்போது அமு லுக்கு வந்திருக்கிறதா ? முதலில் இருந்தது இப்போது ஆரம்பிக்கப் பட்டிருந்தால், உடையார்பாளையம் தாலுக்கா ஜமீன்தாரிகள் போன்ற கிராமங்களில் மராமத்து செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் வந்து அதுவும் மராமத்து செய்யப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தனியாக இருந்த இந்தப் பிரிவு பி. டபிள்யூ. ரியார்கனைசேஷன் செய்த பிறகு ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இங்கே உடையார்பாளையம் பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துச் சொல்ல முடியும்.

THIRU A. R. DAMODARAN : It is reported that some of these scrapers and bulldozers are themselves in need of repair. May I know, Sir, from the Hon. Minister how many of them are in working condition and how many of them are in a state of repair ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது பற்றிய விவர மில்லை என்றாலும், ரிப்பேராக இருக்குமானால், ரிப்பேர் செய்து கொள் ளப்படும். தற்போது ரிப்பேராக இல்லை என்றுதான் தகவல் கிடைத் திருக்கிறது. முக்கியமாக ஸ்கிரேப்பர்கள், டோசர்கள், டிப்பர்கள், டம்பர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வருகிறோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : நாங்கள் ஒரு புல்டோசர் வேண்டுமென்று கேட்டு 4 மாதங்களுக்கு முன்னல் பணம் கட்டியிருந்தோம். இராமநாதபுரம் ஜில்லாவில் எத்தனை டோசர்கள் உபயோகத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று தனியாக புல்டோசர் இல்லை. மொத்தமாக 15 புல்டோசர்கள் இருக்கின்றன. தேவைப்படுகிற இடங்களில் அவைகளை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : அமைச்சர் அவர்கள் தந்த தகவலின்படி எல்லா மாவட்டங்களிலும் தூர் வாருகிற திட்டம் இருக்கிறது என்று தெரிகிறது. ஆனல் கன்னியாகுமரி மாவட்டம் மட்டும் விடப்பட்டிருக்கிறது. அங்கே பல குளங்கள் வண்டல்களால் நிரப்பப்பட்டு தண்ணீர் தேங்காத நிலை இருப்பது அரசு கவனத்திற்கு வந்ததா ? அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு திட்டம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : கன்னியாகுமரி மாவட்டத்திலும் அப்படி ஒரு நிலைமை இருக்குமானல், நிச்சயமாக அரசு ஆழ்ந்து கவனித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவோம்.

Visual Education Shows

*100. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the educational institutions have to pay any tax under the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 for the Visual Education shows conducted by them free to their students ; and

(*b*) if so, the details thereof ?

கல்வி இலவசப் படக் காட்சிகள்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்வி நிலையங்கள் தங்கள் மாணவர்களுக்குக் கல்வி இலவசப் படக் காட்சிகள் காண்பிப்பதற்கென்று தமிழ் நாடு, 1961-ஆம் ஆண்டு உள்ளூர் ஆணைக் குழு நிதிச் சட்டத்தின் கீழ் வரி ஏதேனும் செலுத்த வேண்டுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?